
அனான்சீயும் - ஆகாய கடவுளும்




அனான்சீயும் -

ஆகாய கடவுளும்

பிரான் குனியா


தமிழில் கிருஷ்ணன்





அனான்சீ சிலந்தி மனிதர்களை பற்றிய கதைகள் வரலாற்றில் பலவும் இருக்கிறது. ஆப்ரிக்காவில் தான் இக்கதைகள் சொல்லப்பட்டு வந்தன. மிக சுவாரசியமாக இருப்பதால் இப்போது உலகில் உள்ள எல்லா குழந்தைகளும் இக்கதைகளை விரும்பி கேட்கின்றனர்.

இந்த கதையும் அப்படிப்பட்ட ஒரு சுவாரசிய கதையாகும். அனான்சீ என்னும் சிலந்தி மனிதன் ஆகாய கடவுளிடம் பூமியில் உள்ள குழந்தைகளுக்காக கதைகள் கேட்டுருந்தானாம். கடவுளும் கொடுத்தாராம். அந்த கதைகள் தான் சிலந்தி கதைகள் என அழைக்கப்பட்டதாம்.



ஒரு சமயம் பூமியில் உள்ள குழந்தைகளுக்கென ஒரு கதையும் இல்லயாம். எல்லா கதைகளும் ஆகாய கடவுளிடமே இருந்ததாம். அவை எல்லாம் வானத்தில் உள்ள ஆகாய கடவுளின் வீட்டில் அவனுடைய நாற்காலியின் அருகிலேயே வைத்திருந்தானாம்.

அனான்சீ சிலந்தி மனிதனுக்கு இது நன்றாக தெரியும். பூமியிலுள்ள குழந்தைகளுக்கு அதை கொண்டு வர வேண்டும் என்று எண்ணினான்.

என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியும். நான்ஆகாய கடவுளிடம் சென்று கொஞ்சம் கதைகளை தருமாறு கோரிக்கை வைக்க போகிறேன்.



அனான்சீ சிலந்தி வலையை தைத்தான் அது வானத்தை தொட்டு நின்றது. அது மேலே மேலே சென்று ஆகாய கடவுளின் வீட்டை அடைந்தது.

சிலந்தி மனிதன் அந்த சிலந்தி வலையில் ஏறி கடவுளை சந்திக்க சென்றான்.

ஆகாய கடவுளோ பிரமாண்ட தோற்றத்தில் இருந்தார். “உனக்கு என்ன வேண்டும் சிலந்தி மனிதனே” என்று கேட்டார் அனான்சீயை நோக்கி.








அனான்சீ கடவுளை நோக்கி " கடவுளே தயவு செய்து உங்களிடம் இருக்கும் கதைகளை பூமியில் இருக்கும் குழந்தைகளுக்கு கொடுக்குமாறு வேண்டி கொள்கிறேன். அதன் கைமாறாக நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறுவீர்?"




"நீ ஒரு விசித்திரமான மனிதன்" என்று கூறி சிரித்தார் கடவுள்.



“என் கதைகளுக்கு பதிலாக எனக்கு என்ன வேண்டும் என்று கூறுகிறேன் கேள்!” என்றார் கடவுள்.

“கோர பற்கள் கொண்ட ஒஸீபோ என்னும் சிறுத்தை, தீ போன்று கொட்டும் மொப்ரோ குளவி, யார் கண்ணிலும் படாத அபோட்டியா என்ற தேவதை இவை அனைத்தையும் நீ என்னிடம் கொண்டுவருவாயெனில் நான் உனக்கு கதைகளை தருவேன்” என்றார்.” அதை கூறிவிட்டு சிறித்து சிறித்து மகிழ்ந்தார்.





“சரி அப்படியே செய்கிறேன் கடவுளே
என்று கூறினான்” அனான்சீ




நீயே ஒரு சிறிய மனிதன்! நீ எப்படி
இவர்களையெல்லாம் என்னிடம்
கொண்டு வந்து சேர்ப்பாய்” என்று கூறி
சிரித்தார் ஆகாய கடவுள். “ஒஸீபோ
சிறுத்தை உன்னை தின்று விடும் , தீ
போன்று கொட்டும் மொப்ரோ குளவி
உன்னை கொட்டிவிடும், யார்
கண்ணிலும் படாத அபோட்டியா
தேவதையை எப்படி பிடிப்பாய்”
என்றார் கடவுள்.


அனான்சீ ஒன்றும் கூறவில்லை. தன் சிலந்தி வலையில் இறங்கி வந்தான் பூமிக்கு. கோர பற்கள் கொண்ட ஒஸீபோ என்னும் சிறுத்தை, தீ போன்று கொட்டும் மொப்ரோ குளவி, யார் கண்ணிலும் படாத அபோட்டியா என்ற தேவதை இவை அனைத்தையும் தேடிச் சென்றான்.

“அவர்களை என்னவானாலும் கண்டடைவேன்” என்று மனதில் கூறிக்கொண்டான்.









அனான்சீ முதலில் கோர பற்கள் கொண்ட ஒஸீபோ என்னும் சிறுத்தையை தேடி சென்றான். அது மரத்தின் கீழ் உட்கார்ந்திருப்பதை கண்டான் .

“என் இரவு உணவிற்காக வந்திருக்காயா சிலந்தி மனிதா?” என்று கேட்டது ஒஸீபோ

“முதலில் ஒரு விளையாட்டு விளையாடுவோம் பின்னர் நீ என்னை தின்னலாம்” என்றான் அனான்சீ


விளையாட்டு என்றால் ஒஸீபோவுக்கு ரொம்பவே பிடிக்கும்

“என்ன விளையாட்டு? அதை முதலில் சொல்லு” என்றது ஒஸீபோ

“முதலில் உன் கால்களை நான் கட்டி விடுவேன் பின்னர் விடுவிப்பேன். பிறகு நீ என் கால்களை கட்டி கொள்ளலாம். இது தான் விளையாட்டு” என்றான் அனான்சீ

“சுவாரஸ்யமான ஆட்டமா இருக்கே” என்றது ஒஸீபோ. அனான்சியின் கால்களை கட்டி அவனை தின்ன வேண்டும் என்பதே அதன் திட்டம்.

ஆனால் முதலில் அனான்சீ ஒஸீபோவின் கால்களை ஒரு மரத்தடியில் கட்டி விட்டான்.



“சீக்கிரமே உன்னை ஆகாய கடவுளிடம் உன்னை கொண்டு செல்கிறேன்” என்றான் அனான்சீ. “அதற்கு முன் தீ போன்று கொட்டும் மொப்ரோ குளவியை கண்டுபிடிக்க வேண்டும். நீ எங்கும் ஓடி விடாதே ஒஸீபோ” என்று கூறினான். தன்னை சாப்பிடவேண்டும் என்று நினைத்த ஒஸீபோ இப்போது கட்டுண்டு கிடப்பதை பார்த்து அவனுக்கு சிரிப்பாக வந்தது.



அனான்சீ நடந்து நடந்து ஒரு வாழை மரத்தை வந்தடைந்தான் .
ஒரு பெரிய வாழை இலையை அறுத்து எடுத்தான். சிறுதளவு தண்ணீர் எடுத்து கொண்டான் . ஒரு காய்ந்த சுரக்காயையும் எடுத்து கொண்டான்.

“இப்போ தீ போன்று கொட்டும் மொப்ரோ குளவியை கண்டுபிடிக்கிறேன்” என்று மனதில் கூறி கொண்டான்.








அனான்சீ தேடி கொண்டே நடந்தான். ஒரு இடத்தில   தீ போன்று கொட்டும் மொப்ரோ குளவியை கண்டான். அவன் கொண்டு வந்த வாழை இலையில் தண்ணீரை ஊற்றினான். அது மழை பொழிவது போன்ற ஒரு தோற்றத்தை அளித்தது.




அனான்சீ எல்லா தண்ணீரையும்
ஊற்றினான்.

““மழை! மழை!” என்றான் குளவியிடம்.
“மழையில் நனையாமல் இருக்க என்
சுரக்காயில் வந்து ஏறி கொள்” என்று
கூறினான்.

“நன்றி அனான்சீ !” என்று கூறி
கொண்டே குளவிகள் ஒன்றன் பின்
ஒன்றாக சுரக்காயின் உள்ளே
சென்றது.





“நீ இங்கேயே இரு” என்றான் அனான்சீ . ஒரு மூடியையும் போட்டு மூடி விட்டான் . எந்த மரத்தில் கோர பற்கள் கொண்ட ஒஸீபோவை கட்டினானோ அங்கே சுரக்காயை கொண்டு போய் கட்டி வைத்தான். “உங்கள் இருவரையும் வானத்தின் சீக்கிரமே வானத்தின் கடவுளிடம் கூட்டி செல்கிறேன். அதற்கு முன் யார் கண்ணிலும் படாத அபோட்டியா என்ற தேவதையை கண்டு பிடிக்க வேண்டும்” என்று கூறி புறப்பட்டான் அனான்சீ.



அனான்சீ ஒரு குட்டி பொம்மையை செய்தான். பொம்மை முழுவதும் பசையை அப்பி வைத்தான். கையில் ஒரு சிறிய கிண்ணமும் வைத்தான். அதில் வேக வைத்த கிழங்கை வைத்து விட்டான்.





கொடியை அதன் தலையில் படரவிட்டான். சுற்றி சிகப்பு பூக்களை பரப்பி அந்த பொம்மையை உட்கார வைத்துவிட்டான். இது போன்ற இடங்களில் தான் தேவதைகள் விளையாட வரக்கூடும் என்பது அவனுக்கு தெரியும். .

அனான்சீ கொடிகளின் மறுபக்கம் மறைந்து கொண்டான்.

யார் கண்ணிலும் படாத அபோட்டியா என்ற தேவதை சிகப்பு பூக்கள் நிறைந்த மரத்தின் அருகில் வந்தது.

குட்டி பொம்மையை பார்த்தது தேவதை. கிண்ணத்தில் என்ன இருக்கின்றது என்றும் பார்த்தது.



கிழங்கை பார்த்த உடனேயே அதற்கு எச்சில் ஊர்ந்தது. அதற்கு கிழங்கு என்றால் மிகவும் பிடிக்கும்.



“கொஞ்சம் கிழங்கை நான் சாப்பிடலாமா” என்று அந்த பொம்மையிடம் கேட்டது.




அனான்சீ பொம்மையின் மேல் இருந்த கொடியை ஆட்டினான். அது பொம்மை சரி என்று சொன்னது போல் இருந்தது.

அபோட்டியா சிறிது கிழங்கை எடுத்து உண்டாள். அது சுவையாக இருந்ததால் இன்னும் கொஞ்சம் எடுத்து உண்டாள். இப்படியே நிறைய நிறைய எடுத்து தின்றாள்.



எல்லா கிழங்குகளையும் தின்று விட்டாள் அபோட்டியா. “நன்றி” என்று பொம்மையிடம் கூறினாள். பொம்மையோ அசையாது மௌனமாக இருந்தது.


“நன்றி” என்று மீண்டும் கூறினாள் அபோட்டியா. பொம்மை அசையாமல் இருப்பதை கண்டு கோபம் அடைந்தாள். “என்னுடன் பேசு” என்று கோபமாக கூறினாள். ஆனால் பொம்மையோ எதுவும் பேசவில்லை.





அசையாத பொம்மைக்கு ஒரு அரை

வைத்தாள் அபோட்டியா.




அதன் பிறகு என்ன நடந்தது என்று


தெரியுமா? அவளுடைய கை

பொம்மையின் மீது இருந்த பசையில்

ஒட்டி கொண்டது.








அபோட்டியாவுக்கு கடுங் கோபம் வந்து
விட்டது.

என் கையை விடுகிறாயா அல்லது
இன்னொரு அரை வேண்டுமா என்று மற்ற
கையிலும் ஓங்கி அறைந்தாள். இப்படி மற்ற
கையும் பசையில் ஒட்டி கொண்டது.


அபோட்டியா இன்னும் சீற்றம்
அடைந்தாள். அவள் கால்களால்
பொம்மையை எட்டி உதைத்தாள்.
இப்போது கால்களும் பொம்மையின்
மேல் இருந்த பசையில் ஒட்டி கொண்டது.
அபோட்டியாவின் இரண்டு கைகளும்,
கால்களும் இப்படி சிக்கி கொண்டதை
பார்ப்பதற்கு வேடிக்கையாய் இருந்தது.



அபோட்டியா மாட்டி கொண்டதை


மறைந்த இடத்தில இருந்து


அனான்சீ பார்த்தான்.




அனான்சீ சிறித்துகொண்டே கூறினான் “உன்னை வானத்து கடவுளிடம் கூட்டி செல்கிறேன்” என்று. “சரி அதற்கு முன் மற்ற எல்லாரையும் சந்திக்கலாம்” என்றான்.

ஒஸீபோ என்னும் சிறுத்தை, தீ போன்று கொட்டும் மொப்ரோ குளவி இருவரும் உள்ள மரத்திற்கு அபோட்டியாவை எடுத்து சென்றான் அனான்சீ. பிறகு தன்னுடைய சிலந்தி வலையை வானத்தை நோக்கி கட்டினான்.









கோர பற்கள் கொண்ட ஒஸீபோ என்னும் சிறுத்தை, தீ போன்று கொட்டும் மொப்ரோ குளவி, யார் கண்ணிலும் படாத அபோட்டியா என்ற தேவதை இவை அனைத்தையும் ஏற்றிக் கொண்டு ஆகாய கடுவுள் பாதங்களில் சமர்பித்தான்.

“இதோ நீங்கள் கேட்ட கோர பற்கள் கொண்ட ஒஸீபோ என்னும் சிறுத்தை, தீ போன்று கொட்டும் மொப்ரோ குளவி, யார் கண்ணிலும் படாத அபோட்டியா”. இப்போது கொடுப்பீர்களா நீங்கள் வைத்திருக்கும் புத்தகங்களை பூமியில் உள்ள குழந்தைகளுக்கு? என்றான் அனான்சீ



ஒஸீபோ சிறுத்தை, மொப்ரோ குளவி,
அபோட்டியா தேவதை
எல்லோரையும் பார்த்தார் ஆகாய
கடவுள். பிறகு அனான்சீ சிலந்தி
மனிதனையும் பார்த்தார்.

"சரி அனான்சீ , நான் கேட்ட
எல்லாத்தையும் கொண்டு வந்து
சேத்திட்ட. நீ கேட்டது போல
என்னிடம் இருக்கும் எல்லா
கதைகளையும் உனக்கு
கொடுக்கிறேன். இனி இக்கதைகளை
சிலந்தி கதைகள் என்றே
அழைக்கப்படும்" என்று
கூறினார் ஆகாய கடவுள்



அனான்சீ மிக்க மகிழ்ச்சி அடைந்தான்.
எல்லா கதைகளையயும் பூமியில் உள்ள
குழந்தைகளுக்கு எடுத்து சென்றான்.

இப்போது அனான்சீயையும் அவனது
சாகசங்களையும் உலகில் உள்ள எல்லா
குழந்தைகளும் அறிவார்கள்.

